

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, சின்னக்காம்பாளையம் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் எஸ். வி.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் ரா.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வேலூர் மாவட்டம்

# காட்பாடி கழிஞ்சூரில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்- டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. தொடங்கி வைத்தார்!

வேலூர், ஜூலை 2 - வேலூர் மாவட்டம் காட்பாடி கழிஞ்சூரில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் நடந்த இலவச கண் சிகிச்சைமுகாமை நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு வேலூர் புரபஷனல்லயன்ஸ்சங்க தலைவர் ஏ.அருள்ஜோதி தலைமை தாங்கினார்.

முகாமில் கண்பரிசோதனை செய்யப்பட்டு நோயாளிகளுக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நோயாளிகளுக்கு சி.எம்.சி. மருத்துவ மனை டாக்டர்கள் கண் சிகிச்சை அளித்தனர்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளருமான எம். சுனில்குமார், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர துணை செயலாளர் ஒய். தேவநேசன், வட்ட செயலாளர்கள்கே. என். இளங்கோ,

சி.அரிகிருஷ்ணன், எம். எஸ்.கெஜராஜ், மாநகர மாணவர்அணிஅமைப்பாளர் மகேஷ்பாபு, மாநகர சுற்றுசூழல் அணி அமைப்பாளர் கே. எ. நவீன் குமார், மாமன்ற உறுப்பினர் சரண்யா, தலைமை கழக பேச்சாளர் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளைவேலூர் மாவட்ட பார்வையிழப்புதடுப்புசங்கம், புரபஷனல் சங்கம், வேலூர் சி.எம்.சி. கண் மருத்துவ மனை ஆகியவை செய்திருந்தன.

# ஊழல் செய்த மாஜிக்களை தேடித்தேடி சேர்க்கும் த.வெ.க.!

## இயக்குனர் அமீர் கடும் தாக்கு!

சென்னை, ஜூலை 3- ஊழல் செய்த எல்லோரையும் தேடித் தேடி தவெகவில் சேர்த்து வருகின்றனர், என இயக்குனர் அமீர் கூறியுள்ளார்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 எம்எல்ஏக்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்தனர். மேலும் 25க்கும் மேற்பட்ட எம்எல்ஏக்கள் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். வீரமணி, தங்கமணி, சி.வி. சண்முகம், விஜயபாஸ்கர் ஆகியோரும் அதிமுக தலைமை மீது அதிருப்தியில் உள்ளனர்.

இதற்கிடையே எஸ். பி.வேலுமணி இயக்குனர் அமீர் கடும் தாக்குவில் இணைவதாக பேச்சு எழுந்துள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக திரைப்பட இயக்குனரும் நடிகருமான அமீர் கூறும்போது, “ஊழல் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட அதிமுக முன்னாள் அமைச்சர்களை தவெகவில் சேர்த்துக் கொள்வதே ஊழல் ஒழிப்பு என்று நினைக்கின்றனர். ஊழல் செஞ்ச யாரையும் விட மாட்டோம்.

எல்லோரையும் தேடித் தேடி எங்க கட்சியில் சேர்த்துக்கொள்வோம் என்ற ரீதியில் தவெக செயல்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது” என அவர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசுக்கு எதிராக குரல் கொடுக்க திரையுலகினர் பலரும் தயங்கும் நிலையில் துணிச்சலாக இயக்குனர் அமீர் பேசியிருக்கும் இந்த விஷயத்தை சமூக ஆர்வலர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர்.

### த.வெ.க. அரசைக் கண்டித்து

# மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல்!

## வலுக்கட்டாயமாக கைது!

சென்னை, ஜூலை 3- VBGRamG, கருவிழி கைரேகை கட்டாயம் என்ற சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தில் தென் சென்னை மாவட்ட தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்கத்தினர் பங்கேற்றனர். அப்போது VBGRAMG சட்ட நகலை எரித்து ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு எதிராக கருப்புக் கொடியுடன் அவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். அவர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.

**அறந்தாங்கி, புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மணமேல்குடியில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.மணமேல்குடி கிழக்கு கடற்கரை சாலையில் மாவட்ட தலைவர் தங்கவேல் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்று ஒன்றிய, மாநில அரசுகளை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

**விழுப்புரம்**

இதேபோல், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாற்றுத்திறனாளிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது மாற்றுத்திறனாளிகள், முதியவர்களை பாதிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள VBGRamG மற்றும் கருவிழி கைரேகை கட்டாய திட்டங்களை கைவிட வேண்டும் என வலியுறுத்தி, ஒன்றிய மற்றும் மாநில அரசுக்ளுக்கு எதிராக முழக்கமிட்டனர். தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட நிலையில், அவர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.



கழகத் தலைவர் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரால் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டு வெற்றி பெற்ற நிலையில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை தெற்கு ஒன்றியதிற்குட்பட்ட கவிநாடு மேற்கு, 9a நத்தம் பண்ணை, ஆகிய ஊராட்சிப் பகுதியில் வாக்காளப் பெருமக்களை இல்லம் தோறும் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு ஏற்பாட்டில் ப்ளூ ரேஞ்ச் கிரிக்கெட் கிளப் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் பரிசுக் கோப்பையை வழங்கினார். இதில் மாவட்டக், ஒன்றிய கழக நிர்வாகிகள், தாராபுரம் நகர்மன்ற தலைவர் கு. பாப்புக்கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சட்டம் — ஒழுங்கு!

# சாட்டையை சுழற்ற வேண்டிய முதல்வர் விஜய், ஊருக்கு உபதேசம் செய்கிறார்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 3 – தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுப் போயுள்ள நிலையில் சாட்டையை சுழற்ற வேண்டிய முதல்வர் ஊருக்கு உபதேசம் செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளார். என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது..



தினகரன்
ஜூலை 1, 2026 புதன்கிழமை
நடவடிக்கை தேவை
சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு நடந்து கொண்டு இருக்கும் வேளையில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் 9 கொலைகள் நடந்து இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தவெக ஆட்சிக்கு அழகல்ல
முதல்வர் விஜய் கூட்டியுள்ள 2 நாள் மாநாட்டில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் தலைமையில் மூத்த ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் முதல் தற்போதைய இளம் தலைமுறை அதிகாரிகள் வரை அத்தனை பேரும் பங்கேற்றுள்ளனர். அவர்களிடம் முதல்வர் விஜய் தனது அரசின் நோக்கங்களை தெளிவுபடுத்தி இருக்கிறார். சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவு செய்யலாம். தவறு செய்தவர்கள்

அது வருமாறு:–

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடனான இரண்டு நாள் மாநாடு நடந்து கொண்டு இருக்கும் வேளையில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் 9 கொலைகள் நடந்து இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது த.வெ.க. ஆட்சிக்கு அழகல்ல. முதல்வர் விஜய் கூட்டியுள்ள 2 நாள் மாநாட்டில் தலைமைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர் தலைமையில் மூத்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் முதல் தற்போதைய இளம் தலைமுறை அதிகாரிகள் வரை அத்தனை பேரும் பங்கேற்றுள்ளனர்.

அவர்களிடம் முதல்வர் விஜய் தனது அரசின் நோக்கங்களை தெளிவுபடுத்தி இருக்கிறார். சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவு செய்யலாம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு உயர்வானவர்களாக இருந்தாலும், பாரபட்சமின்றி சட்டப்படி உடனடியாக துரிதமாக நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும். அதில் நிரபராதிகள் யாரும் தப்பித்தவறி கூட பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் சட்டம்ஒழுங்கு கூட்டத்தை நடத்தி, சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு முக்கியமான வழக்கிலும் சட்ட வல்லுநர்களோடு கலந்தாலோசித்து, தவறு செய்தவர்கள் தப்பித்துவிடாத வகையில் உடனடியாகத் தீர்வு கிடைப்பதற்கு சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், வருவாய்த்துறையினர் மற்றும் காவல்துறையோடு கலந்தாலோசித்து, எந்தவொரு சம்பவமும் நடப்பதற்கு முன்னதாகவே மூலகாரணத்தைக் கண்டறிந்து, குற்றச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம்ஒழுங்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களின் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

இதற்காக, வருவாய்த்துறை, காவல்துறை அனைத்துத் தகவல்களையும் சேகரித்து, அதைச் சரி பார்த்து, முன்பாகவே என்ன நடக்கும் என்று கணித்து அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். முக்கியமாகப் பெண்கள் பாதுகாப்பை நூறு சதவீதம் உறுதிப்படுத்த வேண்டும். பெண்களின் பாதுகாப்பிற்கு உரிய சிறப்பு ஏற்பாடுகள் செய்தே ஆக வேண்டும். மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார். விவசாயிகள், மீனவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் கூட்டத்தை முறையாக, சரியாக, கனிவோடு நடத்த வேண்டும்.

மனு கொடுக்க வருகிற மக்களிடம் கனிவாகக் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுடைய பிரச்சினை என்னவென்பதை புரிந்து கொண்டு உடனடியாக அதற்குரிய நடவடிக்கையை எடுத்துத் தீர்வு தர வேண்டும் என்று தெளிவுபடுத்தி இருக்கிறார். போதைப் பழக்கத்தை பொறுத்தவரையில் புலம் பெயர் தொழிலாளர்களை கண்காணிக்க முதல்வர் அறிவுறுத்தி இருக்கிறார். மேலும் போதைப்பொருட்கள் கடத்தல் நடவடிக்கையை முற்றிலும் தடுத்து நிறுத்த போலீசாருக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.

அத்தனை அறிவுரைகளும் சரிதான். ஆனால் தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளை, பலாத்காரம், போதைப்பொருள் புழக்கம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகிறது. போலீஸ் துறையை கையில் வைத்து இருக்கும் முதல்வர் விஜய் இப்போது சாட்டையை சுழற்ற வேண்டிய நேரம். இனியும் முந்தைய தி.மு.க. அரசு மேல் பழிசுமத்த முடியாது. கடும் நடவடிக்கை தேவை. அப்படி எடுத்தால் தான் சட்டம், ஒழுங்கு கட்டுக்குள் வரும். காரணம் சொல்லி இனிமேல் முதல்வர் விஜய் தப்பிக்கவும் முடியாது. அதை தமிழ்நாடு மக்கள் ஏற்க மாட்டார்கள்.

இவ்வாறு ‘தினகரன்’ தலையங்கத்தில் முதல்வர் விஜய்க்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

### த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கம் செய்யக்கோரி

# அரியலூர் மாவட்ட மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர். சுபா.சந்திரசேகர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர். எஸ்.ஆர்.இராமராஜன் பங்கேற்பு!

அரியலூர், ஜூலை 3- அரியலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாசிலை அருகில் பொது இடத்தில் போதை பொருள் பயன்படுத்திய தவெக அரசின் நிர்வாக திறனற்ற, சோபா மாடல் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படியும், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின் படி கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத் திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்டத் துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகர், லதா பாலு,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் செல்வ. பிரபாகரன், ஆர். ரமேஷ், எஸ். சுரேஷ், ஆர். வெங்கட்ராமன், மு. தமிழழகி, ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, பூ. செல்வராஜ், கோ.அறி வழகன், மா.அன்பழ கன், ஆர். கலியபெருமாள், அசோக சக்கரவர்த்தி, வி.எழில் மாறன், தனவேல், இரா. அண்ணாதுரை, தெய்வ. இளையராஜா, ஆர்.செந்தில்குமார், ஏ.ஜி.எஸ். முருகன், நகர செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி ராஜேந்திரன்,

மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் வின்சென்ட் ராஜா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், சுபா.ச. வசந்த பகலவன் தர்மராஜ் வீர சிவா, மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் இராணி, நகர கழக நிர்வாகிகள் மாலா தமிழரசன், இராஜேந்திரன், குணா, உத்திராபதி, முத்தமிழ், ஆசை. அன்பழகன், மற்றும் கழக நிர்வாகிகள் குப்புசாமி, ஆனந்த், இரவிச்சந்திரன், முத்து, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாசிலை அருகில் பொது மக்கள் கூடும் இடத்தில் போதை பொருள் பயன்படுத்திய தவெக அரசின் நிர்வாக திறனற்ற, சோபா மாடல் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க,கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படியும், எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின் படி கண்டன ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், எஸ்.ஆர்.இராமராஜன் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, இராஜேந்திரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், கழக தொழர்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.